**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**GWOP எண்.133/2022**

**ம.சா. – 1– பூங்கோதை**

**நாள். 13.06.2025**

**ம.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

மைனர் குழந்தையின் பெயர் ஸ்ரீ கஹான் ஆகும். தற்போது குழந்தைக்கு 11 வயது நடைபெறுகிறது. குழந்தை எங்கு, என்ன படிக்கிறார் என்பது தெரியாது. குழந்தையானது எதிர்மனுதாரரிடம் இருக்கிறது. மேற்படி மனுவானது எதற்காக நான் தாக்கல் செய்தேன் என்றால் என் மகனை கொன்றுவிட்டதால் நான் குழந்தையை வளர்க்க வேண்டும் என்பதற்காக மனு தாக்கல் செய்கிறேன். மேற்படி குழந்தையானது பிறந்த நான் முதல் அவரது தாயாரா எதிர்மனுதாரருடன் தான் இருக்கிறாரா என்றால் 4 3/4 வயது வரை எதிர்மனுதாரிடமும், அவரது கணவரிடமும் இருந்தார், அதன் பின்னர் எதிர்மனுதாரரிடம் தான் இருக்கிறது. நான் வீட்டு வேலை தான் செய்து வருகிறேன். எனக்கு தனிப்பட்ட வருமானம் எதுவும் இல்லை, எனக்கு தற்போது வயது 63 ஆகும். என்னுடன் எனது கணவர் மட்டும் தான் இருக்கிறார். எனக்கு இறந்து போன மகனை தவிர வேறு குழந்தைகள் யாரும் இல்லை. நானும் எனது கணவரும் மட்டும் தான் இருக்கிறோம். எதிர்மனுதாரர் அவரது பெற்றோர் வீட்டில் தான் இருக்கிறாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை. தற்போது எதிர்மனுதாரர் எங்கு இருக்கிறார் என்றால் எனது மகனை கொலை செய்ததும் போலீசில் புகார் செய்ததும் ஜெயிலுக்கு சென்றுவிட்டார். மைனர் குழந்தை தற்போது எங்கு இருக்கிறார் என்ற விபரம் தெரியுமா என்றால் போலீசில் புகார் கொடுத்த அன்று குழந்தையை காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன், எதிர்மனுதாரரின் தாயார் குழந்தையை அழைத்து சென்றுவிட்டார். அதன் பின்னர் குழந்தை எங்கு யாருடைய பாதுகாப்பில் இருக்கிறது என்ற விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் யாரும் என்னிடம் சொல்லவில்லை. எனது மகனின் இறப்பிற்கு பிறகு குழந்தைக்கு எந்த வித பண உதவியோ, வேறு வகையான உதவியோ செய்துள்ளேனா என்றால் இல்லை. குழந்தை என்னிடம் வந்த பிறகு செய்வேன்.

குழந்தையை பார்க்கவிடவில்லை. எனது மகனின் திருமணத்திற்கு பிறகு எனது மகனும் எதிர்மனுதாரரும் எனது வீட்டிற்கு அருகில் தனிக்குடுத்தனம் நடத்தி வந்தார்கள். எனது மகன் நத்தத்தில் உள்ள யூனியன் அலுவலகத்தில் கணக்கராக பணியாற்றி வந்தார். அதன் பின்னர் இருவரும் மதுரையில் இருந்து குடிபெயர்ந்து நத்தத்தில் இருவரும் தனியாக குடும்பம் நடத்தி வந்தனர். எனது மகனின் இறப்பிற்கு பிறகு எனக்கும், மைனர் குழந்தைக்கும், எதிர்மனுதாரருக்கும் அரசாங்கத்தால் தொகை கொடுக்கப்பட்டதா என்றால் இறுதி சடங்கிற்கு மட்டும் ரூ.25,000/– என்னிடம் கொடுத்தார்கள். மைனர் குழந்தையின் பேரில் எனது மகன் போஸ்ட் ஆபிஸ் வங்கியில் டெப்பாசிட் செய்துள்ளார். மேற்படி தொகை பற்றி கேட்டதற்கு எனது மகன் கொலை செய்யப்பட்டுள்ளதால் எதுவும் தர முடியாது என்று சொல்லிவிட்டார்கள். மேற்படி டெப்பாசிட் செய்யப்பட்ட விபரத்தை இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். மைனர் குழந்தை என்னிடம் இருந்தார் அவர் நல்ல முறையில் வளர்வதற்கான வாய்ப்பும், வருவாயும் இல்லை என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரருடன் அடிக்கடி சண்டையிட்டு எனது மகனுடன் ஒன்றாக வாழ முடியாத நிலையை ஏற்படுத்தி வந்தேன் என்றால் சரியல்ல. தற்போது எனது மகனுக்கு வரவேண்டிய தொகையில், மைனரு குழந்தைக்கு சேரவேண்டிய தொகையை அபகரிப்பதற்காக மைனர் குழந்தையை கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மைனர் குழந்தையை கேட்ட எதிர்மனுதாரர் வீட்டாரிடம் பேச்சு வார்த்தை நடத்தினேனா என்றால் குழந்தை இருக்கும் இடத்தை சொல்லவில்லை. மைனர் குழந்தையை நல்ல முறையில் பாதுகாத்து வளர்ப்பதற்கு எதிர்மனுதாருக்கும், அவரின் பெற்றோருக்கும் இருக்கிறது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் நடத்தை பற்றி எனது மனுவிலும் வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது, அவதூரனது என்றால் சரியல்ல. குழந்தையின் தாயாருக்கு எதிராக குழந்தையை கேட்டு மனுதாக்கல் செய்ய எனக்கு அருகதை இல்லை என்றாலும் எனவே, இந்த மனுவின் பேரில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this

contains a full and true account of the statement Made by the witness.

G SARAN

Digitally signed by G SARAN
Date: 2025.06.13 17:29:09 +0530

Additional District Judge(FAC),

Dindigul.